# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு

## பிரதான கட்டிடத்திற்கான சீரமைப்பு மற்றும் வெளிப்புற சுவர்கள், உள் முகடு (Soffit) மற்றும் Pergolas இன் முகப்பு மற்றும் பக்க மேற்பரப்புகளின் பகுதியை வர்ணம் பூசுதல்

1. பிரதான கட்டிடத்திற்கான சீரமைப்பு மற்றும் வெளிப்புற சுவர்கள், உள் முகடு (Soffit) மற்றும் Pergolas இன் முகப்பு மற்றும் பக்க மேற்பரப்புகளின் பகுதியை வர்ணம் பூசுவதற்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

2. ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதிக்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் பின்வரும் தரத்தை பெற்றவராகவும் இருத்தல் வேண்டும்.

   C8 – CIDA தரம்

3. ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதிக்கு தேவையான தகைமையில் உள்ளடங்குவன:

   குறைந்தபட்சம் இதனையொத்த மூன்று ஆண்டுகள் அனுபவம் தேவை.

4. மீளளிக்கப்படாத கட்டணமாக 1,000.00 ரூபாவை ரொக்கப்பணத்தில் செலுத்தி 2025.06.11 ஆம் திகதி தொடக்கம் 2025.05.23 ஆம் திகதி வரை 0900 மணி தொடக்கம் 1500 மணி வரை இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு, பணிப்பாளருக்கு (நிர்வாகம் மற்றும் நிறுவனப் பணிகள்) எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம்.

5. விலைமனுக்களை 2025.06.12 ஆம் திகதி 1400 மணி அல்லது அதற்கு முன்னர் பணிப்பாளர் (நிர்வாகம் மற்றும் நிறுவனப் பணிகள்), இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு, இல. 276, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 08 என்ற முகவரிக்கு இரு பிரதிகளில் சமர்ப்பித்தல் வேண்டும். பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்களை ஏற்கும் நேரம் முடிவுற்ற பின் அவை உடன் திறக்கப்படும்.

6. அனைத்து விலைமனுக்களும் நிலையான படிவத்தின் 09ஆவது பிரிவில் உள்ளடக்கப்பட்ட விலைமனு பிணைக்கான (நிபந்தனையற்ற உத்தரவாதம்) படிவத்தை பயன்படுத்தி மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்ட அதிகாரம் பெற்ற வங்கிகளில் இருந்து 35,000.00 ரூபா தொகை ஒன்றுக்காக விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும். விலைமனு பிணை இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு, பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் இருத்தல் வேண்டும் என்பதோடு விலைமனு மூடப்படுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட திகதியில் இருந்து 2025.09.11 ஆம் திகதி வரை செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.

**தலைவர்,**

**திணைக்கள பெறுகைக் குழு (சிறிய அளவானது)**

**இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு**

**இல. 276, எல்விட்டிகல மாவத்தை,**

**கொழும்பு 08**